**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.522/2024**
**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மகேந்திரன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ராமையா | தொழில் | : | கேபிள் நிறுவனம் |
| கிராமம் | : | ராயகிரி | வயது | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 20th, 2026.

**(1, 2 எதிரிகள் ஆஜரில்லை. 3ம் எதிரி ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ராயகிரியில் குடியிருந்து வருகிறேன். நான் கேபிள் நிறுவனம் வைத்து தொழில் செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். சாட்சி ஸ்ரீதர், சரவணன் ஆகியோர்களை எனக்கு தெரியும். எதிரிகளுக்கும், ஸ்ரீதர், சரவணன், முருகானந்தம் ஆகியோர்களுக்கும் கேபிள் தொழில் பிரச்சனை இருந்தது. 09.12.2020ல் கரிவலம்வந்தநல்லூரிலிருந்து இராயகிரி போகும் பாதையில் உள்ள கேபிள் வயரை ஸ்ரீதர், சரவணன் ஆகியோர்கள் சரி செய்து கொண்டிருந்தார்கள். சாயங்காலம் 03.00 மணியளவில் வெள்ளப்பாண்டி, கருப்பசாமி ஆகியோர்கள் ஒரு பைக்கிலும், உதயக்குமார் வேறொரு பைக்கிலும் வந்தார்கள்.

எதிரிகள் ஸ்ரீதர், சரவணன் ஆகியோர்களை பார்த்து "யாரை கேட்டு வயரை போடுகிறீர்கள் தேவடியா மவனே" என்று அசிங்கமாக பேசினார்கள்.

ஸ்ரீதர் "எதுவாக இருந்தாலும் முருகானந்தத்திடம் பேசிக்கொள்ளுங்கள்" என்று கூறினார். வெள்ளப்பாண்டி ஸ்ரீதரை கையால் அடித்து கீழே தள்ளினார். ஸ்ரீதர் முள்செடியின் மீது விழுந்து முதுகில் ஊமைக்காயம் ஏற்பட்டது, வலது கால் முட்டிலும் காயம் ஏற்பட்டது. சரவணன் ஸ்ரீதரை காப்பாற்ற சென்றார். சரவணனையும் வெள்ளப்பாண்டி அடித்து கீழே தள்ளினார். சரவணனுக்கு காயம் ஏற்படவில்லை.

வெள்ளப்பாண்டி அவருடைய பைக்கிலிருந்து அரிவாளை எடுத்து ஸ்ரீதர் வைத்திருந்த கேபிள் ஒயரை வெட்டி ரூ.10,000/—ற்கு சேதம் ஏற்படுத்தினார். கருப்பசாமியும், உதயகுமாரும் மறுபடியும் ஸ்ரீதரையும், சரவணனையும் விரட்டி, விரட்டி அடித்தார்கள். கருப்பசாமியும், உதயகுமாரும் வெள்ளைப்பாண்டியை பார்த்து "இவர்களை விட்டால் உன்னுடைய கேபிள் தொழில் நஷ்டமடையும், பைக்கை ஏற்றி கொல்லுடா" என்று கூறியபோது ஸ்ரீதரும், சரவணனும் அலறிக்கொண்டு ஓடினார்கள். நானும், பாண்டியனும் சத்தம் போட்டோம். சரவணனையும், ஸ்ரீதரரையும் எதிரிகள் அரிவாளால் வெட்டி கொன்று விடுவோம் என்று மிரட்டினார்கள். போலீசார் என்னை இது குறித்து விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.21 15:15:33 +0530